**இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம்

செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அனுமதி வழங்கப்பட்டுள்ள விடயங்கள் தவிர்ந்த சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் ஈடுசெய்ய முடியாதிருந்த போதிலும், நிதிச் செலாற்றல் கூற்றில் ஆண்டின் பெறுமானத் தேய்வு செலவினமான ரூபா 6,305,429 தொகையில் | சபையினால் திறைசேரி நிதி ஏற்பாட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களுக்கான காலக் கழிவுகள் 2019 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் நியம இலக்கம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் செயலாற்றல் கூற்றில் ஆண்டின் பெறுமானத் தேய்வு செலவினம் மற்றும் காலக் கழிவுகளின் | நிதிச் செயலாற்றல் கூற்றில் ஆண்டின் பெறுமானத் தேய்வு செலவினம் மற்றும் காலக் கழிவுகளின் பெறுமதி தனித்தனியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அரசாங்கத்தின் மூலதன மானிய காலக் கழிவுகளின் பெறுமதியான ரூபா 3,499,323 கழிக்கப்பட்டு தேறிய பெறுமதியான ரூபா 2,806,105 தொகை மாத்திரம் பெறுமானத் தேய்வு செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | பெறுமதி என்பவற்றை தனித்தனியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் போதியளவான முன்னைய காலப் பகுதிகளின் தவறுகளை கண்டறிந்ததன் பின்னர் விநியோகிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் கடந்த கால ரீதியில் ஒப்பீட்டு பெறுமதி சீராக்கப்பட்டு அந்த தவறுகளின் தன்மை மற்றும் சீராக்கப்பட்ட முறை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், முன்னைய ஆண்டிற்குரியதாக மீளாய்வாண்டின் போது ரூபா 8,053,259 தொகை நிதிக் கூற்றுக்களில் பிழையினை சரிசெய்து மீண்டும் சீராக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்யப்பட்டிருந்த போதிலும், அது கணக்குகளில் வெளிப்படுத்தப்படாதிருந்த மையினால் எதிர் காலத்தில் அவ்வாறு நடைபெறாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 86 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் ஒவ்வொரு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக மொத்த தேறக் கூடிய பெறுமதியை நிர்ணயிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட அளவிடைகளின் அடிப்படை வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | நியம இலக்கம் 07 இன் 86 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள அளவிடல் அடிப்படை வெளிப்படுத்தப்படாதிருந்த மையினால் அதனை எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக பயன்படுத்தப்பட்ட அளவிடல் அடிப்படை வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்றில் அரசாங்கத்தின் பெறுவனவுகள் ரூபா 1,128,707 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது | எதிர்வரும் வருடங்களில் கணக்குகள் தயாரிக்கும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு குறைபாடுகளை சரிசெய்வதற்கு | எதிர்வரும் ஆண்டுகளின் கணக்குகளை தயாரிக்கும் போது குறைபாடுகள் சரிசெய்யப்பட |

| | | |
|---|---|---|
| அகற்றப்பட்டிருந்த ரூபா 467,066 தொகை மற்றும் அதில் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருந்த ரூபா 312,000 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் சரியாக சீராக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 691,210 தொகை 08 வருடங்களை விட பழைய அரசாங்க நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் நபர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன்பட்டோர் மீதியாக காணப்பட்டதுடன், அந்த கடன்பட்டோர் பதிவேட்டில் குறிப்பிடப்பட்ட சில கடன்பட்டோர்கள் போலியானதாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது. | பலவருட காலம் பழமையான இந்த கடன் மீதி தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் கீழ் பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கு அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | பரிசோதனையொன்று பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 104 | மீளாய்வாண்டின் போது நாரஹேன்பிட்ட பிரதான அலுவலகத்தில் இடம் பெற்ற ரூபா 48,990 பெறுமதியுடைய கையடக்கத் தொலைபேசியொன்று காணமல் போனமை, 2012 ஆம் ஆண்டின் போது நாரஹேன்பிட்ட நாற்றுமேடையில் ஏற்பட்ட ரூபா 77,362 தொகையான பண மோசடி மற்றும் 2018 ஆம் ஆண்டில் அநுராதபுரம் உப்புல்தெனிய களஞ்சியத்தில் ஏற்பட்ட ரூபா 4,094,596 பெறுமதியுடைய சோயா அவரை 37,223 கிலோ கிராம் காணமல் போனமை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு | நாரஹேன்பிட்ட பிரதான அலுவலகத்தில் இடம் பெற்ற ரூபா 48,990 பெறுமதியான கையடக்க தொலைபேசி தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இல் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. நாரஹேன்பிட்ட நாற்றுமேடையில் ஏற்பட்ட களவு தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தியடைந்திருந்ததுடன், அது பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டு உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தருக்கு குற்றப்பத்திரிகை அனுப்பப்பட்டுள்ளது. அதற்குரிய மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். அநுராதபுரம் உபுல்தெனிய களஞ்சியத்தில் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தாமதமின்றி பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நட்டத்தினை பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சோயா அவரை இருப்பு காணாமல் போனமை தொடர்பாக விவசாய அமைச்சினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதற்காக மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இது வரையிலும் அந்த அறிக்கை கிடைத்திருக்கவில்லை. | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2) | பணி பூர்த்தி செய்யப்பட்டவுடன் பெறப்பட்ட செயல்நிமித்த உபகட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டில் மூன்று உத்தியோகத்தர்களுக்கு பிரயாணச் செலவினம், போக்குவரத்து செலவினம் மற்றும் கொள்வனவு செய்யவதற்காக வழங்கப்பட்ட ரூபா 118,500 தொகையான 04 முற்பணங்களை தீர்த்து வைப்பதற்காக 42 நாட்கள் முதல் 102 வரையான காலம் எடுக்கப்பட்டிருந்தது. | 04 முற்பணங்களில் 03 முற்பணம் புத்தல, தனமன்வில பண்ணைகளின் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்தமையினால் உரிய பணிகளை பூர்த்தி செய்வதற்கு சில காலம் எடுத்திருந்தது. மிகுதி முற்பணம் கொரோன தொற்று நோய் நிலைமையினால் தேவையான சுகாதார தொற்று நீக்கி பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பெறப்பட்டிருந்ததுடன், முன்னர் காணப்பட்ட சந்தையில் அந்த பொருட்களில் பற்றாக்குறையொன்று காணப்பட்டிருந்தமையினால் கொள்வனவு செய்வதில் ஏற்பட்ட தாமதத்தின் அடிப்படையில் தீர்த்து வைத்தல் தாமதமாகியிருந்தது. | பணிகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் உடனடியாக செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்த்து வைக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 12,505,208 மிகையான இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 70,409,680 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 57,904,472 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் திறைசேரியிடம் இருந்தும் விவசாய அமைச்சிடம் இருந்தும் கிடைக்கப் பெற்ற நிதி ஏற்பாடு ரூபா 25,534,210 இனால் குறைவடைந்தமை, ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 55,441,647 இனால் குறைவடைந்தமை, வட்டி வருமானம் ரூபா 2,030,776 இனால் குறைவடைந்தமை, ஏனைய வருமானம் ரூபா 1,049,828 இனால் குறைவடைந்தமை, ஊழியர் ஊதியங்கள் ரூபா 3,961,912 இனால் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் திறைசேரி / அமைச்சு மானியம், ஏனைய செயற்பாட்டு வருமானம், வட்டி வருமானம் மற்றும் ஏனைய வருமானம் என்பன முறையே 34, 86, 12 மற்றும் 55 சதவீதம் என குறைவடைந்திருந்தது. அவ்வாறே ஊழியர் ஊதிய செலவினம் 19 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், வழங்கல் மற்றும் தேவை செலவினங்கள் மற்றும் போக்குவரத்து தொடர்பாடல், பயன்பாட்டு மற்றும் ஏனைய செலவினங்கள் முறையே 59 சதவீதத்தினாலும் 69 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் வருமானத்தின் விகிதம் 27.79 வீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், நடைமுறை விகிதம் மற்றும் விரைவுச் சொத்து விகிதம் முறையே 0.73 சதவீதத்தாலும் 0.77 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது 1973 இன் 15 ஆம் இலக்க இலங்கை தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபைச் சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள நோக்கம் அல்லாத குளங்களில் மண் அகற்றி அதிவேக வீதிகளுக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன. மண்ணை அகற்றுவதற்காக ரூபா 3,370,595 செலவினம் ஒன்று செலவிடப்பட்டிருந்ததுடன், அதிவேக வீதிகளுக்கு மண் விற்பனையினால் ரூபா 81,134,631 தொகையான வருமானம் பெறப்பட்டிருந்தது. குள செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் வழங்கப்பட்ட மண்ணிற்காக உரிய விவசாய அமைப்புக்களின் சபைக்கு பணம் பெறப்பட்டு அந்த பணம் அரசாங்க நிதி ஏற்பாட்டுடன் ஈடுபடுத்தப்பட்டு சிறிய குளங்களை உரிய நியமத்தில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பொறியியாளர் ஆலோசனையின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியதாக காண்பிக்கப்பட்டிருந்த போதும், அவ்வாறின்றி ரூபா 77,764,036 தொகையான நிலையான வைப்பு கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | தேசிய பட்டினியொழிப்பு பிரசார சபைச் சட்டத்தில், சபையின் பொது நோக்கம் 3 II இன் கீழ் மற்றும் அச்சட்டத்தின் 4 ஆவது விடயத்தில் குறிப்பிடப்பட்ட சபையின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் (ஏ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இராஜ தந்திர அரசியல் கொள்கைகளுடன் மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த செயற்திட்டத்தில் இருந்து உருவாக்கப்பட்ட இந்த பணம் எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தக் கூடிய வகையில் பாதுகாப்பாக உள்ளது. | சபையின் சட்டத்தின் பிரகாரம் உரிய பணம் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சோயா சார்ந்த உணவு உற்பத்தி செயற்திட்டத்திற்காக கடந்த அண்மித்த 03 வருடங்களில் ரூபா 2.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், சபையினால் அந்த உற்பத்தியில் 2020 ஆம் ஆண்டில் நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்தின் கீழ் நவீனமயப்படுத்தப்பட்ட புதிய உற்பத்திகள் அரச தனியார் ஒத்துழைப்பின் கீழ் சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்காக வரைவுபடுத்தப்பட்ட உடன்படிக்கை அரசாங்க செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வதற்காக நிதி ஆலோசனையாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்ததன் பின்னர் உடன்படிக்கையின் பின்னர் இந்த நவீனமயப்படுத்தப்பட்ட புதிய உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | சபை பூர்த்தி உற்பத்திகளை நுகர்வோர்களுக்கு வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | அதிகாரமளிக்கப்பட்ட அரிசி செயற்திட்டத்திற்குரிய கலங்குட்டி தொழிற்சாலையில் அரிசியில் கலப்பதற்கு காணப்படுகின்ற WIP விட்டமின் 683.15 கிலோ கிராம் அளவில் காலாவதியாகி பயன்படுத்த முடியாதிருந்ததுடன், அது தொடர்பாக 2021 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு அகற்றுவதற்கோ அல்லது தேவையான ஏனைய நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உலக உணவு அமைப்பிலிருந்து கிடைத்த அதிகாரமளிக்கப்பட்ட அரிசிகளின் தொகுதியொன்று பயன்படுத்த முடியாமல் காலாவதியாகி இருந்ததை ஏற்றுக் கொள்கின்றோம். சகல அகற்றல் நடவடிக்கைகளுக்காக 2021 மே மாதம் அகற்றல் குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | பரிசோதனையொன்று மேற்கொண்டு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | தனமல்வில விவசாய பண்ணையில் 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை தேறிய நட்டமொன்று | தனமல்விலையில் காணப்படுகின்ற 16 ஏக்கர் பண்ணையின் பாதுகாப்பு, நாளாந்த | நட்டத்தினை குறைத்து இலாபம் பெறக்கூடிய பிரகாரம் பண்ணைகளில் முகாமைத்துவம் செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | அறிக்கையிடப்பட்டிருந்ததுடன், பொது மேந்தலைக் கிரயத்தில் 60 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை சம்பளம் மற்றும் ஊதியங்களுக்கான செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி போன்ற சகல நடவடிக்கைகளுக்காகவும் ஒரு ஊழியர் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். அவரிடம் இருந்து பெறப்பட்ட அந்த சேவைகளுக்காக ஊதியம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. காணப்பட்ட மோசமான கால நிலையில் ஆக்கபூர்வமான விவசாய செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு எங்கள் நிறுவனத்தைப் போன்று இப்பிரதேசத்தில் வாழ்கின்ற விவசாய மக்களுக்கும் முடியாதிருந்திருந்தது. பிரதேசத்தின் விவசாய மக்களின் பங்களிப்பில் சேதனப் பசளை உற்பத்தி செயற்திட்டமொன்று 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு கொள்கை ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஈ) | 10 ஏக்கர் அளவில் உள்ள புத்தல விவசாய பண்ணை நிலத்தில் 02 ஏக்கர் அளவில் மாத்திரம் கூட்டுப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட போதிலும், மிகுதி நில அளவில் ஆக்கபூர்வமான பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | அரசாங்க செயலாளரின் ஆலோசனையின் பிரகாரம் புத்தல பண்ணையில் நாற்று உற்பத்தி மேடையொன்றை அபிவிருத்தி செய்வதற்காக விவசாய திணைக்களத்துடன் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நில அளவினை ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்துதல் வேண்டும். |
| (உ) | பாரம்பரிய அரிசியை விற்பனை செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்கு கவனம் வெலுத்தப்பட்டிருக்கில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பாரம்பரிய அரிசியை விற்பனை செய்வதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாடற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 நீர் பம்பிகள், பிளாஸ்டிக் நீர் தாங்கி (2000 லீட்டர்), நெல் ஆலைக்காக பயன்படுத்தப்பட்ட 06 மின்சார மோட்டர்கள், 02 சேற்றுச் சக்கரங்கள் மற்றும் 01 கொழுக்கி கலப்பை என்பன தொழிற்சாலையில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பழுதுபார்க்கப்பட்டு பயன்படுத்துவதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அரிசிமா உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட 01 ரோலர் இயந்திரம் மற்றும் 02 நெருக்கும் இயந்திரம் (சிப்டர்) என்பன 2016 பெப்ரவரி 29 ஆம் திகதி முதல் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பயன்பாடின்றி காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஆரய்ச்சி பிரிவில் சுவபோச மற்றும் மவ்போச உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட 14,243 ஸ்டிக்கர்கள், போசணைப் பொதிக்காக பயன்படுத்தப்பட்ட உள்உறைகள், 26,087 வெற்று உறைகள் மற்றும் 200 கிராம் சுவபோச பக்கற்றுக்களின் 14,062 பொதிகள் என்பன 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | அனாவசியமான கொள்வனவுகளை மேற்கொள்ளாதிருத்தல் வேண்டும். இந்த பொருட்களை பயன்படுத்துவதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2018 இன் வருடாந்த அறிக்கை தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்பிற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன், அது கிடைத்தவுடன் அச்சிடுவதற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 2019 இன் வருடாந்த அறிக்கை தயாரித்து அவதானிப்பிற்காக விவசாய அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், அவதானிப்புக்கள் கிடைத்தவுடன் அச்சிட்டு பாராளுமன்றத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தாமதமின்றி வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 இல் திருத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 15 செயற்திட்டங்களுக்காக ரூபா 172 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 140 மில்லியன் செலவிடப்பட்டிருக்கவில்லை. அந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளக்கப்பட்ட ரூபா 42 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த 08 செயற்திட்டங்களில் எந்தவொரு பணியும் இடம் பெற்றிருக்கவில்லை. | 2020 இன் முதலாவது காலாண்டு முதல் காணப்பட்ட கொரோனா தொற்று நோய் நிலைமையினால் சில செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) பாரம்பரிய அரிசி கொள்வனவு செய்யும் செயற்திட்டத்தில் களஞ்சியத்தை பழுதுபார்ப்பதற்காக ரூபா 4.750 மில்லியன் தொகை | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | | |
| (இ) | தனமல்வில விவசாய பண்ணையில் சிறு போகத்திற்காக சோயா அவரை பயிரிடுவதற்காக ரூபா 212,400 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டு அதில் 2,240 கிலோ கிராம் சோயா அவரை அறுவடையொன்றை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 440,000 தொகை செலவில் 562 கிலோ கிராம் சோயா அவரை அறுவடையே பெறப்பட்டிருந்தது. அது எதிர்பார்த்த விளைச்சலில் 25 சதவீதம் ஆகும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | தனமல்வில பண்ணையில் உலர்ந்த சாணம் 2,000 மெட்றிக் டொன் பசளை தயாரிப்பதற்கும், சேதனப் பசளை கட்டிடத்தை பழுதுபார்ப்பதற்கும் மற்றும் தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்கும் ரூபா 3.163 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 1.045 மில்லியன் தொகை செலவிடப்பட்டு கட்டிடத்தை பழுதுபார்த்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | தனமல்வில பண்ணையில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது உலந்த சாணம் 75 மெற்றிக் டொன் மற்றும் 2020 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் உலர்ந்த சாணம் 20 மெற்றிக் டொன் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 02 வருடங்களிலும் அந்த உற்பத்திகள் இடம் பெற்றிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | 2020 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு |

| | | |
|---|---|---|
| பிரகாரம் 01 கிலோ கிராம் பாரம்பரிய அரிசி 35,400 பக்கட்டுக்கள் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அது 2019 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட அரிசி பக்கட் அளவினை விட 56 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2020 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட அளவில் 43 சதவீத அளவு மாத்திரம் அரிசி பக்கட் தயாரிக்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது. | | இணங்க பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4.3 பாதீட்டு கட்டுப்பாடு

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் 2020 ஆம் ஆண்டில் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் உள்ளபடியான வருமானத்தையும் பரீட்சிக்கும் போது 2 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான முரண்கள் காணப்பட்டதுடன், பாதிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினங்களை பரீட்சித்த போது 26 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையிலான முரண்பாடுகள் காணப்பட்டன. | 2020 ஆம் ஆண்டில் தேசிய பாதீட்டு திணைக்களத்தில் இருந்து குறைவாக நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது. அதன் பிரகாரமும் முரண்கள் ஏற்பட்டிருந்தன. அவ்வாறே 2020 ஆம் ஆண்டில் உருவான கொரோன தொற்று நோய் நிலைமையினால் அலுவலகங்களை மூடி வைக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக சில பணிகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. அதனால் வருமானம், செலவினங்களில் குறைவொன்று காணப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் செலவினங்களையும் விட உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களில் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. | பாதீடு கட்டுப்பாட்டு சாதனமாக ஈடுபடுத்தப்பட வேண்டும். |